40

Essays and Lectures.

M. Chinniah Chettiar,
Mahipalanpatti.

Y592C

Madura.

உ

கடவுள் துணை.

மகிபாலன்பட்டி

மு. சின்னையாசெட்டியாரின்

வியாசங்களும் உபந்நியாசங்களும்

இவை

கானாடுகாத்தான் மகா-௱-௱-ஸ்ரீ

சா. ராம. மு. சித.

பெத்தாச்சிசெட்டியார் அவர்களால்

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றன.

1913.

விலை அணா 12] [தபாற்கூலி வேறு.



M. Chinniah Chettiar,

MAHIPALANPATTI.

T. S. P. P. MADURA

முகவுரை.

ஸ்ரீமான். எம். சின்னையா செட்டியாரவர்கள் எழுதிய "வியாசங்களும் உபந்நியாசங்களும்" என்ற புத்தகம் வரப்பெற்று முழுதும் படித்துப்பார்த்து அளவில்லாத சந்தோஷமடைந்தேன். விஷயம், சொல்வளம், விவகரிக்குமுறை, நூலின்பயன், இவைகள் நன்குபொருந்த இயற்றப்படும் பிரபந்தங்களே மேம்பாடுடையன வென்பது ஆன்றோர்களின் கொள்கையாயினும் அக்கொள்கையை நன்குமதித்து, நூலியற்றும் நூலாசிரியர்கள் இக்காலத்தில் வெகு பேரிருப்பதாகத்தெரியவில்லை. சில சமயங்களில் இக்காலத்துக்கு அவசியமில்லாத விஷயங்களைப்பற்றி யெழுதுகிறவர்களும் சொற்ப காலத்திற்கு வினோதத்தை பயப்பனவாயினும் பிறகு பயனற்றன வாக முடியும் விஷயங்களைப்பற்றி யெழுதுகிறவர்களும் உண்டு. விஷயங்கள் மேன்மையுடையனவாயினும் படிப்பவர்களின் பழக்கத்திலில்லாத அரும்பதங்களையும் அபூர்வப் பிரயோகமுள்ள கொடுஞ் சொற்களையும் கோத்து பொருளொன்றும் வெளியாகாதிருக்கும்படி மறைத்துப் பாக்களையும் வசனகாவியங்களையும் எழுதி பிறரைவதைக்கின்ற புண்ணிய புருஷர்கள் வெகு பேரையும் பார்க்கின்றோம். ஒரு விஷயத்தை விவகரிக்குமுறை ஜனங்களின் பழக்கத்திற்கு ஒத்ததா யில்லாமற் போனாலும் நூலில் உலக அனுபவத்திற்குப் பொருத்தமான நியாயம் அல்லது விவகாரம் அடங்கி யிராவிட்டாலும் அந் நூலை உலகத்தார் அவமதிப்பார்களே தவிர அதனால் யாவர்க்கும் ஒரு பயனும் உண்டாகாது. அந்நூலை இயற்றிய வித்துவானையும் அறிஞர்கள் கொண்டாடமாட்டார்கள், ஆதலாலன்றோ

> புவியினுக் கணியா யான்ற பொருடந்து புலத்திற் றாகி
> அவியகத் துறைகடாங்கி யைந்திணை நெறிய ளாவிச்
> சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச்சான்றோர்
> கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்.

எனக் கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பரும் வழுத்தியிருக்கின்றார். அம் முறையை நன்குணர்ந்த நமது செட்டியாரவர்கள் பற்பல

விஷயங்களை சலபமும் அழகும் வாய்ந்த நடையில் உலக அனுபவத்தை நன்கு விளக்கி முதிர்ந்தோரும் வாலிபர்களும் படித்து அறிய வேண்டிய பல அம்சங்களைப் புகட்டி பல உபந்நியாசங்களான கோவையாகச்சேர்த்து இயற்றியிருப்பதால் இஃதோர் "மறுவற்றமாணிக்கம்" என யாம் வியந்து கொண்டாடத்தக்கதாகும். அப்படிக்கோக்கப்பட்டிருக்கும் பல உபந்நியாசங்களுள் கடவுளும் அன்பும் என்னும் உபந்நியாசத்தை முதலாவதாகவும், ஆங்கிலேய அரசாக்ஷியின் மாண்பைப்பற்றிய உபந்நியாசத்தை இரண்டாவதாகவும் வைத்து மற்ற உபந்நியாசங்களையும் விஷயங்களின் மேன்மை தாழ்மைக்குத் தக்கவாறு ஒன்றன்பின் ஒன்றாக அமைத்திருக்கும் விநயத்தை நான் மகிழ்ந்துகொண்டாடுகிறேன். மானிடர்கள் பெறமுயலவேண்டியவைகளான நான்கு புருஷார்த்தங்களையும் ஒவ்வொரு உபந்நியாசமும் விரித்துக் கூறுவதாக இச்சிறிய புத்தகம் அமைந்திருப்பதால் இது எக்காலத்திலும் சிறப்புவாய்ந்து நடைபெறு மென்பதிலும் இதையியற்றி அச்சிட்டு உலகத்திற்கு அளித்திருக்கும் நமதுசெட்டியாரவர்களுடைய அறிவிற்கும் பெருமைக்கும் இதுவே ஒரு அறிகுறியாக புகழ்பெற்று விளங்கு மென்பதிலும் சற்றேனும் ஐயமில்லை. கல்வி நுட்பமும் பரோபகார சிந்தையும் அறத்திலன்பும் பெருகி நிற்கும் நமது செட்டியாரவர்கள் அரோக திடகாத்திரத்துடன் இவ்வுலகத்தின்கண் பல்லாண்டு இருந்து இந்நூலைப்போல் இன்னும் பல நூல்கள் இயற்றி அளித்து மன்னுலகத்தை வாழ்வித்து எல்லா இகபரசாதனங்களையும் அடைந்து விளங்கும்படி எல்லாம் வல்ல சதாசிவம் அருள்புரியுமாக.

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்,

அக்கிராஸநாதிபதி, தமிழ்ச்சங்கம், மதுரை.

அபிப்பிராயங்கள்.

The Honourable Doctor Sir.
S. Subramania Iyer Avl.
B. L., L. L. D., K. C. I. E.,
Retired High Court Judge,
***and Vice-President Theosophical Society,* MADRAS.**

Dear Sir !

Your pamphlet and your letter came to hand duly. I am very gratified to find that one in your position is endeavouring to Educate your community on the right lines as you well observe so influential a Section of the public of this presidency as the Nagarathars can if it exerts itself render great Service to the country.

Yours Sincerely,

S. Subramaniam.

(தமிழ் மொழிபெயர்ப்பு)

சென்னை பென்ஷன் ஐக்கோர்ட் ஜட்ஜும், பிரஹ்மக்ஞான சபை யின் உப அக்கிராசநாதிபதியுமாகிய ஆனரபில் டாக்டர் சர்.
எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள்.
B. L., L. L. D., K. C. I. E.

அன்புள்ள ஐயா !

தங்கள் சிறு நூலும், கடிதமும் சரிவரக் கிடைத்தன. நம் இராஜதானியில் நகரத்தார் போன்ற செல்வாக்குள்ள வகுப்பினர் மட்டும் தக்கவாறு முயற்சிப்பார்களானால் தேச நன்மைக்காக மிகவும் உழைக்கக் கூடுமென்று நீங்கள் கண்டறிந்தது முற்றிலும் சரியே. தங்களைப்போன்ற நிலைமையிலுள்ள ஒருவர் தம் வகுப்பினருக்கு நேரிய வழியில் கற்பிக்க முயன்று வருவதைக்கண்டு மிகத் திருப்தி அடைந்து வருகிறேன்.

இங்ஙனம் தங்கள் விசுவாசமுள்ள,
எஸ். சுப்பிரமணியம்.

அபிப்பிராயங்கள்.

மதுரை பிரஹ்மஞ்ஞான சங்கத்தலைவரும் 'பூர்ணசந்திரோதயம்' பத்திராதிபருமான ப்ரும்மஸ்ரீ

ப. நாராயணஐயர் அவர்கள், B. A., B. L., F. T. S.

மகா-ள-ள-ஸ்ரீ எம். சின்னையா செட்டியாரவர்கட்கு ஸர்வாபீஷ்டமுமுண்டாவதாக அநேக ஆசீர்வாதம். தாங்களனுப்பிய வியாசங்களும், உபந்நியாசங்களும் (Essays and Lectures) என்ற பெயருள்ள புஸ்தகத்தைப் பெற்றேன். முழுவதையும் படித்துப் பார்த்தேன். அவைகளெல்லாம் எளிய செந்தமிழில் அழகாக எழுதப் பட்டிருக்கின்றன. விஷயங்கள் மிகவும் பயனுள்ளவைகள். நம்மவர்கள் முன்னுக்கு வருகிறதற்கு அனுகூலமான நலமமைந்த புத்திமதிகள் அவைகளின்கண் வெளியிடப்பட்டிருக்கின்றன. நாட்டுக்கோட்டையாரின் அபிவிருத்தியை உத்தேசித்துச் சிறப்பாக எழுதப்பெற்றுள்ள வியாசங்களாயினும் ஏனையர்களுக்கும் பிரயோஜனகரமானவைகளே. இக்காலத்தில் நாட்டுக்கோட்டையார்களில் அனேகர் கல்விப் பயிற்சிபெற்று வெளிவந்து ஏனையரும் கல்விப்பயிற்சி அடையவேண்டுமென்று முயன்று வருதல் இனி நம் தேசத்துக்கு வரும் நற்காலத்தின் ஸூசனையாம். நாட்டுக்கோட்டையார்களிடம் இப்போது ஏராளமான பொருட்செல்வமிருக்கிறது. அத்துடன் கல்விச் செல்வமும் உண்டாகும் பக்ஷத்தில் காலத்திற்கு ஏற்ப புதிய முறைகளில் நலந்தரும் விஷயங்களை அவர்கள் செய்விப்பார்கள். தேசத்திற்கு க்ஷேமமுண்டாகும். அவர்களை இம்முறையிற் றூண்டுவதற்கு இப்புத்தகம் நல்ல சாதனமாகும். பொதுப்படையாக நம்முடைய ஒழுக்கங்களில் அனேக சீர்திருத்த முறைகளைப் பலவிடங்களில் தெளிவாகச் சொல்லி யிருக்கிறீர்கள். தவிரவும் ஆங்கிலம் படித்த சிலர் தமிழ் பாஷையை உதாஸீனப்படுத்தி வருகின்றமையை நன்குணர்ந்து அவர்கள் மனங்களிற் பதியும்படியாகத் தமிழ்ப்பாஷையின் உயர்வையும் அதன் அபிவிருத்தியால் ஜனங்களுக்கு உண்டாகக் கூடிய நன்மையையும், அப்பாஷையை அலக்ஷியம் செய்தலால் நேரிடும் தீமையையும் பன்முறை வற்புறுத்திச் சொல்லியிருக்கின்றீர்கள். அவர்களும் இப்புத்தகத்தைப் படிப்பாராகில் தமிழ் பாஷையின் மேலுள்ள அலக்ஷியத்தை விட்டொழிப்பாரென்பதில் சந்தேகமில்லை. தங்களுடைய புத்தகத்தைப் படிக்கிற ஒவ்வொருவரும் ஒரு நலம் பெறுவாரென்பது என்னுடைய அபிப்பிராயம். இதுபோன்ற வியாசங்களும், உபந்நியாசங்களும் தாங்கள் இன்னும் செய்து வரும்படியாகத் தீர்க்காயுஸையும் சக்தியையும் தங்களுக்கு ஈசுவரன் அருள வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

ப. நாராயண ஐயர்.

தேவகோட்டை ஜமீந்தார் மகா-ா-ா-ஸ்ரீ

அரு. அரு. ராம. அருணாசலஞ்செட்டியாரவர்கள்.

ஐயா!

தங்களுடைய 4—12—12ன் கடிதமும் புக்போஸ்டிலனுப்பிய வியாசங்களும் உபந்நியாசங்களும் (Essays and Lectures) என்றபுத்தகமும் வந்து சேர்ந்தன. புத்தகத்தையும் பார்வையிட்டேன். விஷயங்கள் நன்றாய் இருக்கின்றன. நிரம்ப சந்தோஷம்.

தேவகோட்டை.
7—12—12.

அருணாசலஞ் செட்டி.

கானாடுகாத்தான் மகா-ா-ா-ஸ்ரீ

சா. ராம. மு. அ. அண்ணாமலை செட்டியாரவர்கள்

ஐயா!

தங்களால் எழுதப்பட்ட வியாசங்களையும் செய்யப்பட்ட பிரசங்கங்களையும் ஒரு புத்தக ரூபமாக அச்சிட்டு வெளிப்படுத்தி அதில் எனக்கொரு காப்பி அனுப்பினதைப்பற்றி நிரம்பச் சந்தோஷமுள்ளவனாக யிருக்கிறேன். ஷை புத்தகம் உபயோகமுள்ள பல விஷயங்களை அடக்கினதாயும் இனிமையும் எளியதுமான நடையில் எழுதப்பட்டதாயுமிருக்கின்றது.நமது நாட்டுக்கோட்டையார் இங்கிலீஷ் தமிழ் ஆகிய இரண்டு பாஷைகளையும் நன்றாய்க் கற்றுக் கொள்ள வேண்டுமென்றும், ஆசார விஷயங்களை காலதேச வர்த்தமானத்தை அனுசரித்து மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும், இப்போது அவர்கள் செய்துவரும் கோவில்கட்டுதல் வேதபாடசாலை ஏற்படுத்துதல் சத்திரம்கட்டி பிராமணர்களுக்கு அன்ன மளித்தல் இவைகளோடு தற்காலத்தில் நாகரீகமானதும் உண்மையில் பொது ஜனங்கள் எல்லோருக்கும் உபயோகப்படும்படியானதும் கற்றறிந்தோரால் புகழப்படக்கூடியதுமான தர்மங்களைச் செய்யவேண்டுமென்றும் நீங்கள் எழுதியிருக்கும் விஷயங்கள் மிகவும் மெச்சத் தகுந்ததே. கல்வி ஆசாரம் தர்மம் இந்தவிஷயங்களில் நீங்கள் எழுதியிருப்பதை நமது ஜாதியார் அனுசரிப்பார்களானால் அதிக மேன்மையடைவார்களென்பதிற் சந்தேகமில்லை. பிரிட்டிஷ் அரசாக்ஷியில் நமது இந்தியதேசமும் முக்கியமாய் நமது நாட்டுக்கோட்டையாரும் அடைந்திருக்கும் நன்மைகளைப்பற்றி உங்கள் புத்தகத்தில் சொல்லப்படுவது முற்றிலும் உண்மையே.நமது ஜாதியார் மேன்மையடைவதற்கு அவசியமாக வேண்டியவழிகளைப்பற்றி இவ்வளவு உபயோகமுள்ள ஒரு புத்தகத்தை அச்சிட்டு வெளிப்படுத்தினதற்காக நமது ஜாதியார் உங்களிடத்தில் நன்றியறிதலுள்ளவர்களாக இருப்பார்களென்பது எனது அபிப்பிராயம்.

தங்கள்,

சா. ராம. மு. அ அண்ணாமலைசெட்டி.

காரைகோத்தான் மகா-ள-ள-ஸ்ரீ

சா. ராமு. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்கள்.

அன்ப !

தங்கள் அருமையான வியாசங்களும் இனிமையான உபந்நியாசங்களும் அடங்கிய (Essays & Lectures) புத்தகம் வரப் பெற்றுப் பேருவகை யெய்தினேன்.

பரோபகாரார்த்தமாய் இத்தகைய புத்தகமொன்றை அச்சிட்டுதவிய தாங்கள் பொதுஜனங்களிடமும் நமது சகோதரர்களிடமும் பாராட்டும் உண்மையன்பு (Real Love) மிகவும் மெச்சத்தகுந்ததே.

கல்வி கேள்விகளிற் சிறந்த தங்கள் அருமையான அறிவினின்றும் வெளிவந்திருக்கும் இவ்வருமைப் புத்தகத்தைப் பற்றிச் சிறியேன் அபிப் பிராயப்படுவது வேறென்னை?

பொதுவாக இப்புத்தகத்தில் எழுதப்பெற்றிருக்கும் ஒவ்வொரு விஷயமும், மிக அழகாகவும் இனிமையான நடையிலும் இலக்கண முறையோடும் உண்மை, அறிவு, சாந்தம், உறுதி, தைரியம் முதலிய பல நன்மைகளை உண்டுபண்ணக் கூடியதாகவும் இருக்கிறது. கால தேச வர்த்தமானங்கட் கேற்ப தங்கள் தங்கள் நடையுடை பாவனைகளை மாற்றி "தேசத்தோடொத்துவாழ்" என்னும் பழமொழிக்கிணங்க ஆசாரங்களில் தற்காலம் சீர்திருந்திவரும் நமது ஜாதியாருக்கு இப்புத்தகம் மிகவும் உபயோகமான தென்பதேயாம்.

தங்கள் நண்பன்,

சா. ராமு. மு. சித. பெத்தாச்சி செட்டி.

முன்னுரை.

இப்புத்தகத்தில் கல்வி, ஆசார சீர்திருத்தம், பொதுவான சில நீதிகள், இன்னும் மனித வாழ்வின் பிரயோஜனங்களைப் பற்றியும் என் சிற்றறிவுக்கு எட்டிய விஷயங்களை ஆங்காங்கு சுருக்கமாக எடுத்துக்காட்டி யிருக்கின்றேன்.

இதிலடங்கிய விஷயங்களுள், சில முன்னரே சுதேசமித்திரன், வைசியமித்திரன், வித்யாபாநு முதலிய பல பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அவற்றைக் கண்ணுற்ற அறிஞர்கள் பலர் இவ்விஷயங்களைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டால் பலருக்கும் உபயோக மாகுமென்று விரும்பி நேரிலும், கடிதவாயிலாகவும் எனக்கு அறிவித்தார்கள்.

என்னுடைய அபிப்பிராயங்கள், அறிஞர்களால் அங்கீகரிக்கப் பெற்று பொது ஜனங்களுக்குப் பிரயோஜனப்படுமானுல் அது எனக்குப் பெரிய மகிழ்வை உண்டாக்குமென்று நான் சொல்லவேண்டியதில்லை. ஆதலின் பத்திரிகைகளில் வெளி வந்த வற்றுள் முக்கியமான விஷயங்களையும் உபயோகமாகு மென்று எனக்குத் தோற்றிய அநேகம் புதிய விஷயங்களையும் சேர்த்து இப்புத்தகம் வெளியிடலாயிற்று.

என்னுடைய ஆண்டும், அறிவும், ஆற்றலும் மிகச் சிறியன வென்று உள்ளபடிக்கு நான் அறிந்திருந்தாலும், பொது நன்மைகள் விருத்தி யடைந்து, எல்லாரும் க்ஷேமமாக வாழவேண்டு மென்னும் உண்மையான விருப்பத்தின் தூண்டுதலால் "ஆசைவெட்கமறியாது" என்றபடி நன்மை பயக்கு மென்று எனக்குத் தோற்றிய விஷய

ங்களை மனச்சாக்ஷிக்கு விரோதமாக மறைக்காமலும், இகழ்ச்சி புகழ்ச்சியை நோக்காமலும் எழுதியிருக்கின்றேன். ஆதலின் இதிற் காணப்படுகிற குறை குற்றங்களையும் அபிப்பிராய பேதங்களையும் அறிஞர்கள் எனக்கு எடுத்துக் காட்டினால் அவைகளை நன்றி யறிதலோடு ஏற்று அடுத்த பதிப்பில் திருத்தமாக பிரசுரிப்பேன்.

தற்காலத்தில் ஒவ்வொரு ஜாதியாரிடத்தும், பழக்க வழக்கங்களிற் பற்பல குறைகளேற்பட்டிருக்கின்றன வென்பதில் ஐயமில்லை. அவைகளை காலத்துக் கேற்றபடி அந்தந்த ஜாதியார் முன்வந்து திருத்தவேண்டுமே யன்றி, பிறரால் எவ்வகையினும் சாத்தியமாவதன்று. நமது ஜாதியிலும் தற்காலத்துக் கேற்றவாறு அநேக திருத்தங்கள் செய்யவேண்டியதா யிருக்கின்றன. அவைகளை இப்புத்தகத்தில் கூடியவரையில் பிரயோஜனப் படும் முறையில் எடுத்துக் காட்டி யிருப்பதால் நமது "வணிகமக்கட்கு" இப்புத்தகம் அதிகப் பயன்தருமென்று நம்புகிறேன்.

M. சின்னையா செட்டி,
மகிபாலன்பட்டி.

விஷய அட்டவணை.

———*———

விஷயம்.		பக்கம்.
1.	கடவுளும், அன்பும்.	1
2.	இங்கிலீஷ் அரசாட்சியும், இந்தியாவும்.	5
3.	இயற்கையறிவு.	11
4.	நாட்டுக்கோட்டையாருக்கு ஒருபொதுச்சங்கம்வேண்டும்.	18
5.	பத்திரிகை படித்தல்	23
6.	நாட்டுக்கோட்டையாரும், ஈஸ்வரபக்தியும்.	26
7.	நாட்டுக்கோட்டையாரும், கல்வியும்.	28
8.	நாட்டுக்கோட்டையார் தர்மமும், கல்வியும்.	32
9.	பரோபகாரம்.	37
10.	கல்வியறிவில்லாத பெண்களும், குடும்பவாழ்க்கையும்.	41
11.	பெண்கல்வி	44
12.	பால்ய விவாகமும், பெரிய பரிதாபமும்.	47
13.	வீண் அழுகை.	53
14.	உலோபியின் சரித்திரம்.	56
15.	உலோபிக்கு உபதேசம்.	58
16.	மாரியம்மனும், உயிர்வதையும்.	62
17.	நாகரீகமான பழக்கங்கள்.	65
18.	சாந்தமும், கோபமும்.	71
19.	கண்ணுள்ள குருடர்கள்.	74
20.	சங்கங்களாலாகும் நன்மைகள்.	77
21.	தமிழ்மொழியும் நாகரீகமும்.	83

	விஷயம்.	பக்கம்.
22.	தலைமை வகித்தல்.	109
23.	மனிதவாழ்வு.	112
24.	நமக்கு நல்லதுணை யெது?	121
25.	மடாதிபதிகளும், பொதுஜனங்களும்.	128
26.	பெரியமனிதரின் இலக்கணம்.	130
27.	விசேஷகாலங்களும், வீண்செலவும்.	134
28.	நாட்டுக்கோட்டையாருட் கைதியானவர்கள்.	163
29.	நாட்டுக்கோட்டையாரும், மூன்றுவருஷக்கணக்கும்.	166
30.	வட்டித்தொழில்.	169
31.	நாட்டுக்கோட்டையாரும், தலைமயிர் வளர்த்தலும்.	173
32.	நீலகிரி, கொடைக்கானல், குற்றாலம்.	175
33.	சேர்க்கையறிவு.	180
34.	உண்மை நூல்கள்.	185
35.	நாட்டுக்கோட்டையாரென்னும் பெயர் வரலாறு.	189
36.	நாட்டுக்கோட்டையாரின் அபிவிருத்தி.	190

THE REGISTRAR OF ... 21 FEB 1913 MADRAS

உ

கடவுளும், அன்பும்.

கடவுளைப் பற்றி நாம் பேசுமுன் கடவுள் யார்? அவரெங்கிருக்கிறார்? அவருடைய ரூபமென்ன? அவருடைய நாமமென்ன? அவர் எத்தன்மையுடையவர்? அவருடைய தொழிலென்ன? அவருடைய கொள்கைகளென்ன? அவருடைய விருப்பமென்ன? அவருக்கும் மனிதர்களாகிய நமக்கும் என்ன சம்பந்தம்? அவரை நாமேன் வணங்கவேண்டும்? வணங்குவதாலடையும் பயன்யாது? அவரைப் பார்க்கமுடியுமா? அவரை யடைவதாலாகும் பயன் என்ன? கடவுள் எத்தனை பேருண்டு? ஒவ்வொரு மதங்கட்கும் தனித்தனி கடவுளிருக்கிறாரா? என்ற விஷயங்களை நாமாராய்ந்தறியவேண்டும். இல்லாவிடில் நமக்குக் கடவுளைப்பற்றி உண்மையான நம்பிக்கையும், ஜீவகாருண்யமும், சகோதர உணர்ச்சியும், ஒற்றுமையும், பிற நன்மைகளு முண்டாகாமல், வீண் வம்பும், கலகமும், பாபமும், பழியு மேற்பட்டு நமது வாழ்நாளை வீணாக்கிவிடும். உலகத்திற் கடவுளை யறிவதற்கு எத்தனையோ வழிகளிருக்கின்றன. ஒவ்வொரு வழியும் மார்க்கமென்றும், மதமென்றும், சமயமென்றும் பற்பல பெயர்களைப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு மதமும் கடவுளை யறிவதற்குரிய மார்க்கமேயாகும். ஆனால் கடவுளை யடைவதற்கு அன்பு ஒன்றே உதவியாயுள்ளது. உறுதியும் அன்பு மில்லாத ஒருவன் எந்த மதத்தில் நின்றாலும், எந்த வேஷத்தைக் கொண்டாலும் ஒரு பிரயோஜனமுமில்லை. கடவுள் எல்லாமதங்கட்கு முரியவர். அவரில்லாத மதங்கள் உண்டாவதே யில்லை. ஆகவே, எல்லாமதங்களும் கடவுளைக் காட்டுகிற மதங்களே. எந்த மதஸ்தனையும் அவர் வெறுக்கமாட்டார். அவர் விரும்புவது மதமன்று. நாம் நல்வழியில் நடக்கவேண்டுமென்றும், தயவும், அன்பும், உண்மையு முடையவர்களாக இருக்கவேண்டுமென்றும், அவர் விரும்புகிறார்.

எந்தமதஸ்தன் நன்மையாக நடந்தாலும் அவர் அங்கீகரித்து ஆதரிக்கிறார். அவர்வாயைத் திறந்து எப்போது மெதையும் சொல்

லாதவர். நம்மை நாமே திருத்தி நடக்கும்படி நமக்கோர் சக்தியை யுண்டுபண்ணி யிருக்கிறார். அதைத் தவிர வேறே எதையும் அவர் மனிதர்கட்குத் தரவில்லை. அதிலிருந்து நாம் செய்கிற வினைகளால் இன்ப துன்பங்களை யனுபவிக்கிறோம். நமது கஷ்ட நஷ்டங்கள், சுகதுக்கங்களுக்கு நாமே உத்தரவாதிகள். நாமிட்ட விதைகள் தாம் முளைத்துப் பலன்றருகின்றன வென்பதை நாம் ஒவ்வொரு விஷயத்திலு முணரவேண்டும். கடவுளுக்கு எப்பொழுதும் எந்த ஜீவனும் வருந்துவதிற் சம்மதமில்லை. இத்தகைய கடவுள் யார்? அவர் நாமரூபமற்றவர். அவரை யின்ன ரூப மின்ன நாமமுடையவ ரென்று சொல்வதற்கில்லை.

(தேவாரம்.)

"மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி மயானத்தான் வார்ச
டையா னென்னி னல்லா, னொப்புடைய னல்ல னொருவ னல்ல
னோரூர னல்லனோ ருவம னில்லி, யப்படியு மவ்வுருவு மவ்வண் ண
மு மவனருளே கண்ணாகக் காணி னல்லா, லிப்படிய னிவ்வுருவ னி
வ்வண் ணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே"

எல்லாம் அவருடைய ரூபங்களே. எல்லா மவருடைய நாமங்களே. அவரெங்கு மிருக்கிறார். அவரில்லாத இடமேயில்லை. அவரில்லாத பொருள்களேயில்லை. அவரெப்பொழுதும் ஆனந்தமும், காருண்ணியமு முடையவர். படைத்தல், காத்தல், அழித்த லென்பவை யவருடைய தொழில்கள். எல்லா ஜீவர்களும் துன்பமற்று இன்பமடையவேண்டு மென்பது அவருடைய கொள்கை. அவருடைய விருப்பமென்ன? ஜீவர்கள் ஒருவரை யொருவர் துன்புறுத்தாமல் ஹிம்சிக்காமல் மோசம் செய்யாமல் பரஸ்பரம் நம்பிக்கையும், ஒற்றுணர்ச்சியும், உதவியும், ஆதரவும், அன்புமுடையவர்களாக இருக்கவேண்டு மென்பதேயாம். கடவுளுக்கும் மனிதர்கட்கும் நீங்காத சம்பந்தமுண்டு. கடவுளை யின்றி ஜீவர்களுமில்லை. ஜீவர்களை விட்டுக்கடவுள் விலகவும் முடியாது. நமக்குத் தீயகுணங்களும் செயலும் நீங்கி நல்லெண்ணங்களும் செயல்களும் உண்டாதற் பொருட்டு நாம் அவரை வணங்கவேண்டிய தவசியமாகிறது. நாம் அவரைப் பார்க்கமுடியுமா? ஒவ்வொரு நிமிஷமும் பார்த்துக்கொண்டே யிருக்கிறோம். ஆனால் அவர்தானென்ற உணர்வுமட்டும் நமக்கு

சுலபமாக உண்டாவதில்லை. உண்டான விடத்து ஒன்றும் பேசுவதற்கில்லை. ஒருவருக்கும் சொல்வதற்கில்லை. அதுதான் அதிசயம். அதுதான் ஆச்சரியம். அதுதான் மகிழ்வு. அவரைக்கண்டு அவரையடைவதிற் பயனென்ன? பிறப்பிறப்பற்று நித்தியானந்தத்தையனுபவிப்பதே யாகும். இப்படி கடவுள் எத்தனையுண்டு? ஒரே ஒரு கடவுள்தானுண்டு. இத்தகைய சர்வ வல்லமையுள்ள கடவுளைத்தான் ஒவ்வொரு மதஸ்தரும் நம்புகிறார்கள். ஆலயங்களில் வணங்குகிறார்கள். பலவகையாகப் பாராட்டுகிறார்கள். மனிதர்கட்கு ஆலய தரிசனம் மிக முக்கியமானது. மனிதன் சித்த சுத்தி யடைவதற்கு ஆலயத்தைப்போற் பிரயோஜனமுள்ளது வேறெதுவுமில்லை. ஆனால் ஆலயத்தைக் கடவுள் வசிக்கிற விடமென்று கொள்வதுபோல, ஆத்மாக்கள் வசிக்கிற சரீரங்களையும் கடவுளின் ஆலயங்களென்றே நினைத்து அன்புகொள்ள வேண்டும். அப்படி யில்லாதவரையில் ஜீவகாருண்ணியமும், இரக்க சிந்தையு முண்டாகா. ஜீவர்களிடத் திரக்கமற்ற ஒருவன் கடவுளுக்குப் பிரியமற்றவனாகிறான்.

கடவுள் தனக்காக எதையும் விரும்பாதவரென்றும் அவருடைய விருப்பங்க ளின்னவையென்றும் முன்னரே சொன்னோம். அதைப் பின்பற்றி நடக்காதவர்களைப் பாபம் செய்தவர்களென்றே கருதுகிறார். ஆகவே, கடவுளிடத்து உண்மையான அன்புடையவர்கள், ஜீவர்களிடத்து அன்பற்றவர்களாக இருக்கமுடியாது. எவன் ஜீவர்கள் விஷயத்தில் அன்பில்லாதவனாக இருக்கிறானோ, அவன் கடவுளிடத்துக் காட்டு மன்பு பொய் வேஷமென்று நாம் தெளிவாயுணரவேண்டும். அன்பு மிகுதியுள்ள ஒருவனுக்கு ஜாதியென்றும், மதமென்றும் பேதமேற்பட நியாயமில்லை. எந்த ஜாதியும், எந்த மதமும் அன்புக்கு வேற்றுமை யுடையவல்ல. ஜாதி மதங்களைப் பிடித்து நிற்கிற மனிதர்க ளல்லாமல் மற்ற ஜீவராசிகளானாலும் அன்புக்கு வேற்றுமையுடையன வல்ல. வருந்துகிற ஒரு புழுவைக் கண்டவிடத்தும் ஐயோவென் றிரக்கமுறுவதே, உண்மையான அன்பாகும். ஜீவர்களிடத் தன்பில்லாமற் சிவபூஜை செய்வதி லொருபயனு மில்லை யென்பதோர் சத்தியவாக்கேயாம். கடவுள் இல்லையென்று எப்பொழுதும் நினைக்கப்படாது. நாம் செய்

கிற ஒவ்வொரு விஷயங்களையும், அவர் நம்மிடமிருந்தே பார்த்துக் கொண்டிருக்கின்றார். கடவுள் எங்கே யென்றால் ஆகாயத்தை யும், பூமியையும், திக்குகளையும் காட்டுவதைப் பார்க்கிலும் இரு தயத்திற் கைவைத்துக் காட்டுவது விசேஷமாகும். நாம் ஒரு செய்கை செய்யும்போது, அது கெட்டதா? நல்லதா? கூடுமா? கூடாதா? வென்று ஆலோசிக்கிறோம். ஆலோசியாமற் செய்தா லும் பின்பு உணருகிறோம். அப்படி உணருகிற வஸ்து வொன்று நம்முள்ளிருக்கிறது. அந்த வஸ்துத்தான் கடவுளின் சாயை மனச்சாக்ஷியென்று சொல்லப்படுகிறது. அந்த மனச்சாக்ஷி நமக் குக் கட்டுப்பட்டதன்று. அது சுவாதீனமுடையது. உண்மை பேசுவது. அதையறியாமல் நாமேதையும் செய்யமுடியாது. அவனன்றி யோரணுவு மசையாது. ஆகவே, பிறவிப் பிணியற்று நித்தியானந்தம், பெரிய இன்பம், மோக்ஷவீடு அடைவதற்கு, ஜீவர்களிடத்து வேற்றுமையில்லாத உண்மை யன்புபூண்டு, துன்பமிபற்றுவதை நீக்கி, நம்மா லியன்ற உதவியையும் உபகா ரத்தையும் செய்து நமது மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் நடப்பதே கடவுளை யடைவதற்குப் பிரயோஜன முள்ள நல்ல வழியாகும். நிச்சயமாகக் கைகூடும்.

கடவுள் தம்மிடத்துக்கு வருகிற ஜீவர்களை நோக்கி நீ எந்த மார்க்கமாக வந்தாய்? என்று கேட்கப்போவதில்லை யாதலின் எல்லா மதங்களும் உண்மையுடையன வென்றும், எதை யனுட் டித்தாலும் முத்தி சித்திக்குமென்றும் சொன்னோம். ஆனால் நிச்சயமாக ஒன்றைப் பற்றி நிற்கவேண்டுமே? எல்லாம் நல்ல தென்றால் எதைப்பற்றி நிற்பது? என்ற கேள்வி பிறக்கலாம். மனி தன் மதமாறுத லடைவது நிரம்பத் தப்பிதம். எந்த மதத்திற் பிறந்தானோ எந்த மதத்தை யவன் பிதா அனுட்டித்தாரோ அதையே பற்றி நிற்கவேண்டும். ஏன் எதுவும் உண்மையற்ற மதமன்று. ஒருவன் சைவசமய அனுட்டானமுள்ள குலத்திற் பிறந்தால் அவன் வைஷ்ணவனாகவும், பௌத்தனாகவும், சைன னாகவும், கிரிஸ்டியனாகவும், மகம்மதியனாகவும் மாறவேண்டிய அவசியமென்ன? தான் பிறந்த மதத்தில் என்ன குற்றத்தைக்

கண்டான்? புகுந்த மதத்தில் என்ன விசேஷத்தைக் கண்டான்? அப்படிச் செய்வது அவனுடைய அறியாமையே யாகும். இப்படியே ஒவ்வொரு மதஸ்தனும் மற்ற மதங்கட்கு மாறவேண்டிய அவசிய மொன்றுமில்லை. எந்த நதி எத்தனை கோணலாக ஓடினாலும் சங்கமமாவது சமுத்திரத்திற்றானே? எந்த ஊருக்காவது ஒரே பாதை மட்டுமிருக்கிறதா? பலபாதைகள் ஒரு ஊருக்குள் வந்து சேருவதை நாம் பார்க்கவில்லையா? பாதை பலவேயன்றி ஊர் வேறன்றே? எந்தப்பாதையானாலும் ஊர் போய்ச் சேரவேண்டியதுதானே நம்முடைய நோக்கம்? ஆகவே, மதமாறுதலடைவதால் விசேஷபல னொன்றுமில்லை. ஆனால், மற்றமதங்களைத் தூஷிக்கவாவது, பரிகசிக்கவாவது, நிந்திக்கவாவது கூடா. அப்படிச் செய்கிற ஒருவன் வீண் கலகக்காரனே யன்றி அறிவுள்ளவனல்லன். புறமத தூஷணை யில்லாமற் றன் மதத்தைத் தான் எவ்வளவு வேண்டுமானாலும் புகழ்ந்துகொள்ளலாம். ஒருஸ்திரீ தன் நாயகனைப் போற்றவேண்டுமென்றால் மற்ற ஊரிலுள்ள புருஷர்களை யெல்லாமிகழவேண்டிய தவசியமில்லை. ஒவ்வொரு ஸ்திரீக்கும் தன் தன் நாயகன் பெருமையுடையவன்தானன்றோ? தன் மதத்தைச் சிலாகித்துக் கொள்ளவென்றால், புறமத தூஷணை யவசியமென்பதில்லை. எல்லா மனிதர்களும் சகோதரர்களே. எல்லா மதங்களும் சகோதர மதங்களே. அறிவுக்கு ஒன்றும் பேதமில்லை. அன்புக்கு ஒன்றும் பேதமில்லை. கடவுளும் ஒன்றே. அன்பும் ஒன்றே. அன்புள்ளவன் எவனும் கடவுளை யடைகிறான். கடவுளே அன்பு. அன்பே கடவுள். முடிவில் எல்லாம் ஆனந்தமே கைவல்யம்.

இங்கிலீஷ் அரசாட்சியும், இந்தியாவும்.

உலகத்திலுள்ள வல்லரசுகளில் நமது (British) பிரிட்டிஷ் அரசாட்சியைப்போன்ற காருண்யமும், நடுநிலைமையும், நீதியும், பெருந்தன்மையும், சாமர்த்தியமும், வல்லபமும், விசாலமும் பொருந்திய அரசு எதுவுமில்லை. பிரிட்டிஷ் நாடுகளிற் கல்விக்கு இருக்கிற கௌரவமும் மதிப்பும் செல்வாக்கும் ஆதாயமும் வேறெந்த நாடுக

ளிலுமில்லை. கல்விக்கும் அறிவுக்கும் மதிப்பு வைத்திருக்கிற நாடு எதுவும் நாகரீகத்தில் அதிக மேன்மையுடையதென்பது யாவருமறிந்ததேயாம்.

நமது இங்கிலீஷ் அரசு முறையை நோக்குமிடத்து அஃதொரு அவதார புருஷனுலேற்படுத்தப்பட்டதென்று காணப்படுகிறது. மனித வாழ்விற்குரிய ஒவ்வொரு விஷயமும் அனுபவத்திற் கண்டு அதையளவிட்டு ஆழ்ந்து சிந்தித்து சட்டதிட்டங்கள் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. மனிதர்களது ஞாபகத்துக்கு வராத செய்கைகட்கெல்லாம் கடவுளின் விதிபோற் சட்டமிருக்கிறது. உலகமெல்லாம் இஃதொரு புதிய விஷயமென்று ஒன்றைக் குறிப்பிட்டு பிரமிக்கும்படியான காரியமாக இருந்தாலும் அந்த விஷயத்துக்கும் முன்னமே விதிவிலக்குகள் ஏற்பட்டிருக்கின்றன. உத்தியோகமுறையோ படிப்படியாக ஒருவரையொருவர் மேலிருந்து கவனிக்கும்படியும் கண்டிக்கும்படியும் நியமித்து ஒருவன் ஒன்றை அக்கிரமமாக இஷ்டப்படி செய்துவிடாமலும் நியாயத்துக்குப் பங்கமில்லாமலும் நடக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கிறது.

குற்றவாளியென்று ஒருவன் பிடிக்கப்பட்டால் அவன் குற்றம் செய்தது உண்மைதானு அல்லவாவென்று கண்டுபிடிக்கும்படி படிப்படியாக நியாயாதிபதிகள் ஏற்பட்டிருக்கிறுர்கள். போலீஷ் விசாரணை முதல் பிரிவி கௌன்சில் வரையில் ஒருவன் தன்னைக் குற்றமற்றவனென்று காட்டிக்கொள்ள இடமேற்பட்டிருக்கிறது. இப்படி நமது இந்தியாவில் எக்காலத்தும் எந்த அரசாட்சியிலும் இருந்ததில்லையென்று நாம் சொல்லக்கூடும். ஆதியில் தர்ம ராச்சியமாக இருந்த காலத்திலும் பாரபக்ஷமில்லாத நியாயம் கிடைத்ததேயன்றி இவ்வளவுபடிப்பும், கவனமும் இருந்ததில்லையென்றறிகிறோம். ஆதிகாலம் ஒருவாறு நன்னிலையிலிருந்ததென்றாலும் மத்தியகாலத்தை நினைக்கும்போது மனம் நடுங்குகிறது. அதாவது கி. பி. 1000 முதல் 1800 வரையில் இந்தியாவைப்போற் சீர்கெட்டுக் கவலையும் அச்சமும் துக்கமும் ஹிம்சையும் அடைந்த தேசம் வேறெதுவுமில்லை. எங்குபார்த்தாலும் அரசர்கள் ஒருவர்க்கொருவர் சதிசெய்வதும் சண்டையிடுவதும் ஜனங்களைக் கொலை செய்வதும்

கொள்ளையடிப்பதும் சூறையாடுவதும் இன்றைக்கு ஒரு அரசன் நாளைக்கு ஒரு அரசனாக மாறுவதும் நிதானமும் நிச்சயமுமின்றி வரிவசூல் செய்வதும் நீதி முறைகள் கவனிக்கப்படாமலும் வாயுள்ளவனுக்கு வல்லபமிகுந்தும் ஏழைகட்கு ஹிம்சை மிகுந்தும் கையிலுள்ள பொருள்களைப் பாதுகாக்க முடியாமல் பூமிக்குட் புதைத்து வைத்தும் இன்னும் எட்டிலடங்காத எழுதமுடியாத கஷ்டங்களையனுபவித்துக்கொண்டும் இந்தியர்கள் பட்டபாடு கொஞ்சமன்று. இவைகட்கெல்லாம் காரணம் திறமையற்ற மூர்க்கர்களான அரசர்களின் ஆளுகையேயாம். இப்படி அல்லோல கல்லோலமாக அலைபட்டு நிலைகெட்டு நல்லரசற்று இந்தியமாதா தவித்துக்கொண்டிருந்த முக்கியமான சமயத்திற்றான் நமது காருண்யமுள்ள பிரிட்டிஷ் ஆளுகை நமக்குக் கிடைத்தது. அவர்கள் இத்தகைய கலக்கங்களைச் சமாதானப்படுத்தி துஷ்டர்களை ஒடுக்கி ராஜரீகமுறையைச் சீர்ப்படுத்தி ஜனங்களை நிம்மதியாக விருக்கச் செய்து நேரில் அரசியற்ற ஆரம்பித்தார்கள். சட்டதிட்டங்களை ஒழுங்குபடுத்தியது மட்டுமன்று, எக்காலத்திலும் நம்மவரறியாததும் அனுபவிக்காததுமான அனேக சௌக்கியங்களை நமக்குச் செய்து தந்தார்கள். அவற்றுள் முக்கியமானவை:—புகைக்கப்பல், ரயில், தந்தி, தபால் முதலியன. இவைகளின் உபயோகத்தைப்பற்றிப் பேசிப் பேசி வாய் சலித்து விட்டதாலும் சிறு பிள்ளைகளும் இந்த நன்மையையுணர்ந்திருக்கிறார்களாதலாலும் அதை இங்கு விரித்தல் மிகையாம். வியாபாரத்துக்கும் வியாபாரிகட்கும் இவைகளாலுண்டான நன்மைகட்கு ஒரு எல்லையில்லை. இவைகளைத்தவிர ஜாதிமதங்களின் ஆவேசங்களை யடக்கினார்கள். ஆலயங்களைக் காப்பாற்றினார்கள். கல்வியை விருத்திசெய்தார்கள், புதிதுபுதிதாக ஆகாய விமானம் கம்பியில்லாத் தந்திவரை கண்டுபிடித்து நம்மை அதிசயிக்கச் செய்தார்கள். கல்வி முறையிற் செய்திருக்கிற ஒழுங்குகளும் அளவுகளும்வியக்கத்தக்கன. இப்படியே ஒவ்வொரு துறைகளிலும் நன்றாகக் கவனம் செலுத்திச் சீர்படுத்தி வகைவகையாகவும், படிப்படியாகவும் அமைத்து அரசாட்சிசெய்து வருகிற அழகையும், திறமையையும், வர்ணிக்கவென்றால் ஆதிசேஷனைப்போல் ஆயிரம் நாவிருந்தாலும் முடியாதகாரியமாகும். இத்தகைய பேருபகாரத்துக்கு நமது இந்திய நாடு எப்பொழு

தும் மறக்கமுடியாத நன்றியறிதலும், இராஜவிஸ்வாசமும் பக்தியும் நிரம்பியிருக்கக் கடமைப்பட்டிருக்கிறது. ஆனால், நமது இந்தியா இராஜபக்தியில் ஒரு சிறிதும் குறைந்த தேசமன்று. மற்றத் தேசங்களைப்போல் அரசனை ஒரு தலைவனாக மட்டும் கொள்கிற வழக்கமில்லை. அரசனைத் தெய்வத்தன்மையுடையவனாகக் கொள்கிற தேசமாக இருந்ததென்பதை நமது நூல்களும் கொள்கைகளும் விளக்கமாகக் குறிப்பிடுகின்றன. அரசனுக்குத் துரோகமாவது சதியாவது செய்கிறவனை சமூகத்தில் நின்று முற்றிலும் விலக்கப்படுவதுடன் அவனையொரு பஞ்சமாபாதகனெனவும் கருதப்படுவது ஆதி முதல் இந்தியரின் சுபாவமாக விருந்தது. அரசனைக் கொண்டாடுகிற முறையையும் வழிபடுகிற முறையையும் மற்றெந்தத் தேசத்தாரும் இந்தியர்களிடமிருந்துதான் கற்றுக்கொள்ளவேண்டும். இந்த அருமையான சுபாவமும் கொள்கையும் கொடுங்கோலரசர் காலத்திலும் மாறவில்லையென்றால் பெருமை பொருந்திய பிரிட்டிஷ் அரசர் காலத்தில் எவ்வளவு விருத்தியடைந்திருக்குமென்று நாம் சொல்ல வேண்டியதில்லையன்றோ? உதாரணமாக, சமீபத்தில் நமது மகாராஜா சக்ரவர்த்தியார் டெல்லிக்கு வந்துபோன பெரிய சம்பவமே போதுமானதாகும். 1858-ல் இந்திய சக்கிரவர்த்தினியாக முதல் முதல் வந்த நமது காருண்ணியமுள்ள விக்டோரியா மகாராணியார் தமது அருமைத் திருமுகத்தில் இந்திய ஜனங்களுடைய க்ஷேமமே நமக்கு வலுவாகும். அவர்களுடைய திருப்தியே நமக்குக் காப்பாகும். அவர்களுடைய நன்றியே நமக்குக் கைம்மாறாகும் என்று குறிப்பிட்ட விலைபெற்ற மாணிக்கங்களான சொற்கள் நமது மனதைக் கவர்ந்து உற்சாகத்தையும் தைர்யத்தையும் மனக்கிளர்ச்சியையும் உண்டுபண்ணின. அந்த முறையையே பின்பற்றி இப்போது நம்மை ஆண்டுவருகிற மாட்சிமை தங்கிய ஐந்தாவது ஜார்ஜ் அரசரும், மேரியரசியும் தாங்கள் முடிசூட்டிக்கொண்ட வைபவத்தைத் தங்கட்குள்ள எத்தனையோ தேசங்களிருக்க அங்கெல்லாம் காட்டாது இந்தியர்கட்குமட்டும் காட்டுதற்கு விரும்பி அநேக தூரம் யாத்திரை செய்து வந்து இந்தியர்கள் கண்குளிரக் காணும்படி செய்தார்கள். இவ்வளவு பெரிய சக்ரவர்த்தியொருவரை இந்தியா எக்காலத்தும் தெரிசித்ததில்லை. அரசதம்பதிக

21 FEB 1913

ஸின் அருமையும் அன்பும் இன்சொல்லும் நாம் எப்போதும் மறக்கத்தக்கனவல்ல. இது ஒன்றே நமது சக்ரவர்த்தியார் இந்தியாவில் வைத்திருக்கும் ஞாபகத்துக்குப் போதிய சான்றாகும். அரச தம்பதிகளை யென்றுமில்லாத குதூகலத்தோடு வரவேற்று உபசரித்து டெல்லி தர்பாரென்று சிறிய சிறிய கிராமங்களிலும் முடிசூட்டுக் கொண்டாட்டம் கொண்டாடிய சிறப்பொன்றே இந்தியர்களின் உண்மையான ராஜபக்தியை நன்கு வெளிப்படுத்துகிறது. இவ்விரண்டைப்பார்க்கிலும் அரசனுக்கும் குடிகளுக்குமுள்ள பரஸ்பர அன்பை விளக்கத்தக்க சாதனம் வேறெதுவுமில்லை. இப்படியே இன்னும் அனேக காலத்துக்குக் குடிகளிடத்தன்புள்ள அரசரும் அரசரிடத்துப் பக்தியுள்ள குடிகளுமாக இந்தியா சிறப்புறவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவன் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

இதுவரை நாம் பொதுவாகப் பேசினோம். இனி எமது நாட்டுக்கோட்டையாருக்கு பிரிட்டிஷ் அரசாட்சியாலுண்டான விசேஷ நன்மைகளைப்பற்றியும், சிறிது கூறிவிட்டு இந்தவியாசத்தை முடித்து விடுவோம். ஆதியில் நாக நாட்டிலிருந்து பாண்டிநாட்டுக்கு வந்து பாண்டியனுடைய ஆதரவில் நெடுநாள் கௌரவமாகவேயிருந்து காலம் கழித்து வந்தார்கள். பிறகு நாளடைவில் பாண்டிய வம்சம் பலவீனமடைந்து விட்டது பதினொருவது நூற்றாண்டில் பாண்டியநாட்டைச் சோழராஜர்கள் கைப்பற்றினார்கள். அதற்குப் பிறகு இந்தியாவிற் பற்பல மாறுதல்களும் புரட்சியும் உண்டாயின. மகம்மதிய அரசர்களின் கொள்ளையும் அந்நியாயமும் பொறுக்கக் கூடியதாகவில்லை. அந்தக்காலத்திற்றான் நமது நாட்டுக்கோட்டையாருக்கு முன்னிருந்த பெருமைகளும் ராஜமரியாதைகளும் போய் கிராமங்களில் தலைமறைவாகக் குடியிருக்க நேர்ந்தது. பழைய ஆசாரமுறைகளும் மாறுபட்டன. கல்வியும் குறைவுற்றது. சாதாரண ஜீவனம் செய்யுமியல்புடையவர்களாக நேர்ந்தது. இப்படிப் பலவகையிலும் சிறுமைபடைந்துவிட்டதாற் பின்னும் நன்னிலைமைக்குவர இன்னும் பிரயாசையெடுக்கவேண்டியதாயிற்று கி. பி. 1793 வரை இந்தக்கஷ்டம் நம்

மவரைப் பற்றிக்கொண்டிருந்து பின்பு சிறிது சிறிதாக நீங்க ஆரம்பித்தது. பதினெட்டாவது நூற்றாண்டு முதலாக நம்மவர் கவலையற்று வாழவும் தூரதேசங்கட்குச் செல்லவும், அங்கு அச்சமில்லாமலிருக்கவும், வியாபாரம் செய்யவும், கைப்பொருள்களைப் பயமில்லாமற் காட்டவும் சௌகரியமாயிற்று. அதிலும் நமது கருணாநிதியாகிய விக்டோரியா மகாராணியார் இந்தியாவை நேரிற் கைக்கொண்ட 54 வருஷங்களாகத்தான் நம்மவருக்குப் பூரணமாகநல்லகாலம்பிறந்தது. நீராவிக்கப்பல்களும் ரயில்களும் நமக்குப் பெரிய உதவிகளைச் செய்தன. இவைகளின் உதவியால் நாம் அன்னிய தேசங்களான பர்மா, மலேயா, சுமத்திரா, செய்கோன் முதலிய நாடுகளுக்கு தாராளமாகவும், குறித்தகாலத்திலும் போய்வர சௌகரியமாயிற்று. பெரிய பெரிய வியாபாரங்கள் செய்யவும், பொருளீட்டவும் ஏதுவாயிற்று. தந்தி தபால்கள் அளவற்ற அனுகூலங்களை உண்டுபண்ணின. லாக்கோர்ட்டுகளும் போலீஸ்களும் நம்மையும் நமது பொருளையும் காப்பாற்றிற்று. இன்னும் நம்மவர் அடைந்திருக்கிற ஒவ்வொரு நன்மையும், பிரிட்டிஷ் ஆட்சியாற் கிடைத்ததென்பதை நாம் சந்தோஷமாகச் சொல்லுகிறோம். சரீர பலத்தாலும் தைர்யத்தாலும் மிகக்குறைந்திருக்கிற நமக்கு இவ்விரண்டையும் தாங்கி நின்று நம்மைக் காப்பாற்றுவது பிரிட்டிஷ் கொடியேயன்றி வேறில்லை. பிரிட்டிஷ் கொடி ஒரு நிமிஷம் மறைந்திருந்தாலும் நமது பொருளும் பெருமையும் நம்பத்தக்கதன்று. ஆகவே, நமக்கு ஜீவாதாரமாக இருப்பது பிரிட்டிஷ் ஆளுகையேயாம். இந்த ஆளுகை எக்காலமுமிருந்து இப்படியே நம்மவருக்கும் நமது தேசத்துக்கும் பல நன்மைகளைச் செய்து நீடு வாழவேண்டுமென்று இறைவன் திருவருளை இன்னொருமுறை பிரார்த்திப்போமாக.

குடிகளை அரசன் காக்கட்டும்
அரசனைக் கடவுள் காக்கட்டும்.

இயற்கையறிவு.

அதிசயமான கதைகள்.

அறிவு இரண்டு வகைப்படும். ஒன்று இயற்கை அறிவு, ஒன்று செயற்கை யறிவு. இயற்கையறிவு என்றால் நல்ல வினையின் பயனாக மனிதன் பிறக்கும் போதே கூடப்பிறக்கிற அறிவு. பிரதி மனிதனும் இவ்வறிவோடுதான் பிறக்கிறானென்றாலும் சிலருக்கு அதிக மாகவும் சிலருக்கு சொற்பமாகவும் இருக்கும். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்றபடி இவ்வறிவு விசேஷமாக இருப்பதும் இல்லாததும் குழந்தைப்பருவத்திலேயே யறியலாம். சில குழந்தைகள் ஒருமுறை கண்டதையோ கேட்டதையோ நடிப்பதும் பேசுவதுமாக இருப்பதோடு இன்னது அசங்கிதமானது இன்னது சுத்தமானது என்று ஒருவர் சொல்லாமலே தெரிந்து கொள்கின்றன. இன்னும் ஆச்சரியப் படத்தக்க விதமாக நடந்து கொள்கின்றன. இவைகள் இயற்கையறிவு நிரம்பிய குழந்தைகள், சில குழந்தைகள் சுறுசுறுப்பில்லாமலும் அழுவதும் பால்குடிப்பதும் தூங்குவதுமன்றி வேறொன்று மறியாதனவாக இருக்கின்றன. இவை இயற்கையறிவு குறைந்த குழந்தைகள். (இன்னுமனேக வித்தியாசமான குறிகளுண்டெனினும் சிலவற்றை மட்டிலுமிங்கே குறிப்பிடிற் போதுமென்றெண்ணுகிறேன்.) இக்குழந்தைகளின் பருவத்துக்குத் தக்கபடி அவ்வறிவும் வளர்ந்து, முடிவில் அதனதன் பயனைத்தருகின்றன. இனிச் செயற்கையறிவாவது படிப்பினால் உண்டாகுமறிவு. மனிதர்களுக்கு இவ்விரண்டறிவுகளும் (இயற்கையறிவும் கல்வியறிவும்) அவசியமேயாகும். இவற்றுள் இயற்கையறிவு விசேஷமுடையது. இயற்கையறிவு குறைந்த ஒருவன் நன்றாய்ப் படித்திருந்தாலும் **(Imitation)** போலி வயிரம் போற் பிரயோஜனமில்லை. அவனுக்கு சந்தர்ப்பம், நோக்கம், பின்யோசனை முதலியன தெரியா. ஆழ்ந்த புத்தியுமிராது. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போற் கற்றதை உளறிக்கொண்டு திரிவதன்றி வேறு பயனில்லை. எல்லா மனிதர்களையும் எல்லா சந்தற்பந்தையும் எக்காலத்தையும் ஒரே தன்மையாகப்பாவித்து நடப்பான். படிப்பதன்றிப் படிப்பினு

லாகும் பயன் இன்னதென்று அவனறியான். அவனிடத்து வீண் கர்வமும், வீண் வம்பும் அதிகமாகக் காணலாம். அவ னால் பிறருக்கு ஒரு நலனுமில்லை. அப்படிப்பு இயற்கையறி வோடு கலந்தாலன்றிப் பிரயோஜனமும் பிரகாசமுமுடையதாகா. ஆனால் இயற்கையறிவுள்ள மனிதனுக்குப் படிப்பு வேண்டாமோ வெனின் அவனுக்குத்தான் அவசியம் வேண்டும். இயற்கையறி வுள்ளவன் படித்திருந்தால் அவன் உலகத்துக்கு அதிக நன்மை செய்யக் கூடும். எந்த மனிதனைப்பற்றி நாம் அதிமேதாவி யென்று கேட்கிறோமோ அந்த மனிதன் இயற்கையறிவு நிரம் பிய பெரும் படிப்பாளியாகவே யிருப்பான். இயற்கையறிவுள்ள மனிதன் கட்டாயம் படித்தே தீரவேண்டும். இன்றேல் சாணை யிற் பிடித்துச்செதுக்கிப் பட்டைதீராத வயிரக்கல் போலும், பிறந்தும் பிறவாதமனிதன் போலும், பிரகாசமற்று பேர் மழு ங்கி அருமையான சரீரத்தை வீணாக்கிக் கொள்கிறான். இதி லொருசந்தேகம், இயற்கையறிவு குன்றிய படிப்பாளியாற் பிர யோஜனமில்லை யென்பதை யனேகர் ஒப்புக் கொள்ள மாட்டார் கள். படித்தவனுக்கு எல்லா அறிவு முண்டாகிவிடு மென்பது அவர்களபிப்பிராயம். ஆனால் நாம் அப்படிச் சொல்லக்கூட வில்லை. உதாரணமாகச் சில விஷயங்களை யிங்கெழுது வாம்:

இயற்கையறிவில்லாத வித்துவானொருவன் ஒரு பிரபுவைக் காணும் பொருட்டு அவர் பேரில் கவி பாடிக்கொண்டு போயிரு ந்தான். வித்துவான் போன சமயம், பிரபுவானவர் தம்பந்துக் களி லொருவரிறந்துபோன துஷ்டிக்கு அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். வித்துவான் சந்தர்ப்பமொன்றையும் நோக்காமல் போனவுடன் தான் பாடி வந்த கவியை, ராகதாளத்துடன் படி க்க ஆரம்பித்தான். பிரபுவோ நல்ல மனிதர். வித்துவானை நோக்கிச் சாந்தமாக

ஐயா! சமயம் நன்றாயில்லை. பிறகு வாருங்கோ.

வித். பிரபு! நன்றாய் கவனிக்க வேண்டும். இரண்டு மூன்று விதமாகப் பொருளடக்கிப் பாடியிருக்கிறேன்.

பிரபு. இருக்கட்டும். இப்போதெனக் கவசரமான சமயம்

வித். அருமையான கவி. நான் எப்பொழுதும் யார் பேரி லும் இப்படிக் கவி செய்ததில்லை.

பிரபு. எங்கே போகிறது, இருக்கட்டும். நான் சாவகாச மாகக் கேட்கிறேன்.

வித். என் பாட்டனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். அவர் ஸேது சம்ஸ்தானத்தில் ஒரு வெண்பாவுக்கு ஆயிரம் பொன் பெற்றவர். அவருடைய சொந்தப் பேரன் தான் நான்.

பிரபு. நீங்கள் வித்துவானல்லவென்று நான் சொல்ல வில்லை. இப்பொழுது சமயமில்லை யென்று தான் சொல்லுகி றேன்.

வித் இயமலோகத்துத் தலபுராணம் பாடிச் சென்றவர் என் பூட்டன் தான். நான் அதற்கு உரை செய்கிறேன்.

பிரபு. அதெல்லாம் நிரம்பச்சரி. எனக்கு நேரமாகிறது

வித். சற்று தயவு செய்ய வேணும். பாரதயுத்தத்திலே அர்ச்சுனனுடைய பாணங்களால் கர்னன் சோர்ந்த சமயம், (கதை சொல்ல ஆரம்பிக்கிறார்,)

பிரபு. நில்லுமையா. அப்படிச் சோர்ந்த சமயமாக இருந் தாலும் பாதகமில்லை. இது மனிதர் இறந்த சமயம் ஆதலால் இனி அதிகமாகப் பேசாமலிரும்.

வித். தங்களைப்பற்றி நான் பிரமாதமாகக் கேள்விப்பட்டி ருக்கிறேன்.

பிரபு. என்னையா! செவிடன் காதிற் சங்கூதியது போலிருக் கிறதே. (கடுமையாக)

வித். (கண் சிவந்து) "போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடில், தூற்றினும் தூற்றுவர் சொன்ன சொற்களை, மாற் றினும் மாற்றுவர்" என்றறியீர் போலும்.

பிரபு. ஆனால் வசை பாடப்போறீரோ.

வித். ஆம் ஆக்ஷேபமென்னே.

பிரபு. (தமது வேலைக்காரரை நோக்கி) நான் வரும் வரை இவரிங்குதானே இருக்கட்டும். வித்துவான் திடுக்கிட்டு ஓட வழி பார்க்கிறார். பிரபு மனமிரங்கி இயன்றதை யுதவிப் புத்திமதியும் சொல்லி யனுப்பிவைத்தார்.

இயற்கை யறிவில்லார்க்குக் கல்வி யறிவு பிரயோஜனப்படா தென்பதற்கு மற்றொரு கதை:—ஒரு அரசனிடத்தில் வெகுமதி பெறுவதற்கு ஐந்து வித்துவான்கள் ஒன்று சேர்ந்து சென்றார்கள். ஐந்து பேர்களில் ஒருவன் சங்கீதவித்துவான், ஒருவன் இலக்கண வித்துவான், ஒருவன் ஜோதிடன், ஒருவன் வைத்தியன், ஒருவன் தர்க்க வித்துவான். இவ்வைந்துபேரும் தனித்தனி ஒவ்வொரு வித்தையிலும் வல்லவர்கள். அரசனுடைய ஊரை யடைந்ததும் அகாலமாயிற்று. தாங்கள் வந்திருப்பதாக மந்திரிக்கு அறிவித்தார்கள். மந்திரி போஜனத்துக்குப் பிறகு அரச சமூகத்துக்கு வரும்படி அனுமதி கொடுத்தார். சமையல் செய்வதின் பொருட்டு ஐந்து பேரும் தனித்தனி ஐந்து வேலைகளை ஒப்புக்கொண்டார்கள். சங்கீத வித்துவான் சமையல் செய்யவும், இலக்கண வித்துவான் தயிர் கடைச்சரக்கு முதலியன வாங்கி வரவும், ஜோதிடன் இலைபறித்து வரவும், வைத்தியன் காய் கறி வாங்கி வரவும், தர்க்க வித்துவான் நெய் முதலியன வாங்கி வரவும் ஒப்புக்கொண்டார்கள். அரிசி கொண்டுவந்திருந்தார்கள். சங்கீத வித்துவான் சமையல் செய்ய ஆரம்பித்தார். உலையில் அரிசியையிட்டு நெருப்பை யதிகமாக மூட்டினார். அது கொதிக்க வாரம்பித்தது. கொதிப்பின் தொனியைக் கேட்டவுடன் சப்த சுரங்களும் ஞாபகத்துக்கு வந்துவிட்டன. உடனே இரண்டுவிறகுக்கட்டைகளைக் கையிலெடுத்துத் தாளம் போட வாரம்பித்தார். நான்கு காலத்துக்கும் அதீதமாகக் கொதிப்பின் வேகம் போய்விட்டது. தாளத்துக்கு ஒத்துவரவில்லை. வித்துவான் கண் சிவந்து உனக்காக ஒரு கணக்கு ஏற்பட்டிருக்கிறதா என்ன? வென்று சினந்து கையிலிருந்த விறகுக்கட்டையால் பானையை ஓங்கி அடித்தார். அடியினால் அடுப்பு நெருப்பு அரிசி மூட்டி

எல்லாம் தூளாகிவிட்டன. போனாற் போவென்று வித்துவான் கோபமாகக் குந்தியிருக்கிறார். இனி, இலக்கண வித்துவான் கடைச் சரக்குகளை வாங்கிவிட்டு தயிருக்கு எதிர்பார்த்திருந்தார். அங்கொரு இடையன் மோரோ——மோரு என்று கூறிவந்தான். வித்துவான் இடையனை நோக்கி; 'ஏ கோபால! ததி அல்லது தயிர் என்றுகூறுக. மோரோ—மோரு என்பது உயர்ந்தோர் வழக்கமன்று' என்றார். இடையன் எந்த இலக்கணத்தைக் கண்டான்? 'ஐயா! வேணுண்ணா வாங்கிக்கோ, வேண்டாட்டிபோ' என்று சொல்லிவிட்டுப் பின்னும் அப்படியே கூறிக்கொண்டு நடந்தான். வித்துவான் கோபித்து 'ஏ ஆயனே! உனக்குமட்டிலும் தனியே இலக்கண மூளதோ' வென்று அவன் கையைப் பிடித்தார். தயிர்க்குடம் தவறி வீழ்ந்துடைந்து போயிற்று. இடையனும் வித்துவானும் இழுத்துக்கொண்டு நிற்கிறார்கள். மூன்றாவது ஜோதிடன் இலை பறித்தற் பொருட்டு ஒரு ஆலமரத்தி லேறினான். அப்போது ஒருபல்லி சொல்லிற்று. அதை யாராய்ந்து பார்த்தான். அது ஏறினால் அபாயம் வருமென் றிருந்தது. சீ! என்று இறங்கினான். மற்றொரு பல்லி சொல்லிற்று. அதை ஆராய்ந்தான். அது இறங்கினாற் பெருமோசம் வருமென்றிருந்தது. என்ன செய்வான்? பாபம்! அப்படியே ஏறாமலும் இறங்காமலும் நடு மரத்திற் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறான். நான்காவது வைத்தியன் பஜாருக்குப் போய்ப் பார்க்கக் காய்கறிகளொன்றும் பிடிக்கவில்லை. ஒவ்வொன்றும் வாத பித்த சிலேட்டுமத்தை யதிகப்படுத்துவதாகவே யிருந்தன. எல்லாவற்றுக்கும் பொருந்தியதாக ஒரு கறியுமகப் படவில்லை. ஆலோசித்துக்கொண்டு ஒரு புறமாகப் பஜாரிற்றானே யிருந்துவிட்டான். ஐந்தாவது தர்க்க வித்துவான் ஒரு தொன்னையில் நெய்யை வாங்கிக்கொண்டு வரும் வழியில் தர்க்கிக்க வாரம்பித்தான். நெய்க்குத் தொன்னை ஆதரவா, தொன்னைக்கு நெய் ஆதரவா வென்று தர்க்கித்தான். தொன்னையில்லாவிட்டால் நெய் நிற்காது. நெய்யில்லாவிட்டால் தொன்னையைக் காற்று கொண்டுபோய்விடும். தெளியவில்லை. தொன்னையைத் திருப்பினான். நெய் கொட்டிப் போயிற்று. ஐயோ! மோசம் போயிற்றே என்று வருத்தமாக அங்கோரிடத்தி லிருந்துவிட்டான். முடிவில் சமையலாகவுமில்லை. சாப்பிடவுமில்லை. அஸ்தமிக்கும் வரையில் இராஜ சமுகத்தில்

வரவில்லையேயென்று மந்திரி விசாரித்தபோது விஷயங்களை யறிந்து சேவகர்களால் எல்லோரையும் கூட்டிவந்து சாப்பிடச் செய்து பின்னும் வேடிக்கை பார்க்கும்பொருட்டு தலையணைகளை வைத்துச் சுருட்டிய பாய்க் கட்டொன்றை ஒரு சேவகனிடம் கொடுத்து வித்துவான்களிடம் கொண்டுபோய் பாயும் தலையணையும் இருக்கிறது என்று சொல்லிப் போட்டுவிட்டு வரும்படி செய்தார். அப்படியே சொல்லி சேவகன் போடவும் அதை யெடுக்கச்சென்ற மற்றவர்களை நோக்கி இலக்கண வித்துவான் ஏ மதியிலிகாள்! பாயும் தலையணை யென்றாலென்ன சாமானியமோ? குடற் கும்பிகளெல்லாம் வெளியில் வந்துவிட்டா லென்செய்வது? என்னே! நம்மதியிருந்தவாறு என்று பதட்டமாக உளறினர். ஆமாம். யார்கண்டா. கொம்பு முளைத்த தலையணைகள் இராஜா வீட்டிலிருக்கலாம், நமக்கேன் பொல்லாப்பு என்று ஒருவரும் தொடாமலும் தூங்காமலும் அதிக ஜாக்கிறதையாக இரவைக் கழித்தார்கள். மறுநாட் காலையில் ராஜ சமூகத்துக்கு வரவழைத்து மந்திரி புத்திசொல்லி வெகுமதியும் தந்தனுப்பின ரென்பது ஒரு பழங் கதை. ஆகவே இயற்கையறிவில்லாமல் எவ்வளவு படிததிருந்தாலும் அவன் விவேகியாக மாட்டான். ஆனால் படிப்பில்லாமல் இயற்கையறிவும் பயன்படாது. எப்படி உயிருக்கு உடலும் உடலுக்கு உயிரும் அவசியமோ, அதுபோலவே கல்விக்கு இயற்கையறிவும் இயற்கை யறிவுக்குக் கல்வியும் அவசியமாகும்.

இனிக் கல்வி ஒன்றினாற்றான் இயற்கையறிவு விசாலமடையுமோ என்னின் அப்படியன்று. மற்ற வழிகளுமுண்டு. கல்வியைப் பார்க்கிலும் கேள்வி விசேஷமுடையது. 'கற்றலிற் கேட்டலே நன்று' என்றார் பெரியோர்கள். கேள்வியால், படித்தறிய முடியாத பெரிய பெரிய விஷயங்களை யெல்லாம் சுலபமாக அறிந்துகொள்ளக் கூடும். சீக்கிரமாக இயற்கையறிவு விசால மடைவதற்கு கேள்வியே விசேஷமுடையது. இரண்டாவது தேச சஞ்சாரம் செய்வதாலும், இயற்கையறிவு விசாலமடையும். பல ஜனங்களோடு பழகி பல நடையுடை பாவனைகளைப் பார்த்து பல தேசங்களின் வழக்கங்களையும் இயற்கைகளையுங்கண்டு சீதோஷ்ணங்களை யனுப